1974 சனவரி 21]

இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் உள்ள இடைநிலைத்தர ஆசிரியர் பதவிகள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் உள்ள இடைநிலைத்தர ஆசிரியர் பதவிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அப்பள்ளிகளுக்கு, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தேர்வு தர ஆசிரியர் பதவிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) மொத்தம் 59 ஆகும்.

(இ) தேர்வு நிலையிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை 5 ஆகும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்தப் பதவிகளை அதிகப்படுத்தும்போது அல்லது ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது அந்தக் காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த இடங்களை உடனுக்குடன் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது ராமநாதபுரம் மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வியாகும். பொதுவான கேள்விக்கு சரியாக விடையளிக்க, தனிக் கேள்வி போடவும்.

Transit Loss in Civil Supplies Transactions

* 25 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the percentage allowed for transit loss for Civil Supplies transactions;

(*b*) the total transit loss incurred by the Civil Supplies Department during the financial years 1968–69 and 1969–70; and

(*c*) out of this, the amount written off by the Government during each financial year?

[1974 சனவரி 21

உணவுப்பொருள்களை எடுத்துச் செல்வதில் ஏற்படும் விரயம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவுப் பொருள் வழங்கு நடவடிக்கைகளில் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் ஏற்படும் விரயம் எத்தனை சதவீதமாக இருக்கலாமென அனுமதிக்கப்பட்டுள்ளது?

(இ) 1968-69, 1969-70 நிதியாண்டுகளில் உணவுப்பொருள் வழங்கு துறைக்கு அவ்வாறு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதன் மூலம் மொத்தம் எவ்வளவு விரயம் ஏற்பட்டது?

(உ) இதில், ஒவ்வொரு நிதியாண்டிலும், அரசால் கணக்கிலிருந்து நீக்கி விடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) சரக்குகளை எடுத்துச் செல்கையில் ஏற்படும் விரயத்திற்கு வகை ஏதும் செய்யப்படவில்லை. பொது வாக சரக்கு அனுப்புகையில் 0.5 சதவீதத்திற்கு மேல் விரயம் ஏற்படுவது, நெல் நேர்வில் 1 சதவீதத்திற்கு மேல் விரயம் ஏற்படுவது மிக உன்னிப்பாக ஆய்வு செய்யப்படுகிறது.

(இ)

ஆண்டு	அளவு டன்னில்	மதிப்பு ரூபாயில்
1968–69	2,693	16,39,107
1969–70	6,612	37,41,679

(உ)

ஆண்டு	கணக்கிலிருந்து தள்ளிவிடப் பட்ட விரயம் ரூ.
1968–69	2,49,692·33
1969–70	3,28,707·81

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 16 லட்சம், 37 லட்சம் ரூபாய் அளவிலே இந்த உணவுப் பொருள்களை எடுத்துச் செல் வதிலே விரயம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். இவ்வளவு விரயம் ஆவதற் குக் காரணம் என்ன? அதற்கு யாராவது பொறுப்பாக இருந்தால், அவர்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, கேட் கின்றபோது இதில் தொகை பெரிதாக இருப்பதாகத் தோன்றலாம். கிட்டத் தட்ட ரூபாய் 8 கோடிக்கு தான்யங்கள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

1974 சனவரி 21]

கிட்டத்தட்ட 67 கோடி ரூபாய்க்கு, 9,80,000 டன் இதில் வந்திருக்கின்றது. இந்த சதவிகிதப்படி பார்ப்போமேயானால், கிட்டத்தட்ட எல்லாம் சேர்த்து சராசரி சேதாரமாகத் தான் இருக்கும். .39 சமவிகிதம்தான் குறைவு ஏற்பட்டிருக்கின்றது. .5 சதவிகிதம் வரையிலே குறைவு ஏற்படலாம் என்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. அரிசியாக வந்தால், .5 சதவிகிதம் தள்ளலாம் என்ற நிலையும் இருக்கின்றது. இப்போது ஏற்பட்டிருப்பது .39 சதம்தான். ஆகையாலே இது அதிகமான அளவிலே இல்லாமல் இருக்க விரைவிலே சரி பார்க்கப் படவிருக்கின்றது. அதுவே நெல்லாக இருந்தால், ஒரு சதவிகிதம் கூட சேதாரம் இருக்கும். ரயில் போக்குவரத்தில் இந்த சேதாரம் ஏற்பட்டிருக்கின்றது. ரோடு போக்குவரத்தில் வருவதற்கு இந்த சதவிகிதத்தில் சேதாரம் ஏற்பட ஒத்துக்கொள்வதில்லை. இப்போது ஏற்பட்டிருப்பது ரயில் போக்குவரத்திலே ஏற்பட்ட சேதாரம் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, சதமானம் குறைவாக இருந்தாலும், சேதம் என்னமோ மொத்தத்தில் அதிகமாகத் தெரிகிறது. இது ரயில் போக்குவரத்தில் மட்டும் ஏற்பட்ட சேதம் தானா அல்லது கோடவுனில் இருப்பாக இருக்கும்போது அங்குள்ள பெருச்சாளிகளால் ஏற்பட்ட சேதமும் இதில் சேர்ந்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இது போக்குவரத்தில் ஏற்பட்ட சேதாரம் மட்டும் தான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இது போக்குவரத்தில் ஏற்பட்ட சேதாரம் என்று சொல்கிறார்கள். இவ்வளவுதான் ரயிலில் ஏற்ற வேண்டுமென்று இருக்கிறது. அதற்குக் குறைத்து ஏற்றுகிறார்களா? வந்து சேரும் போது யாரும் கணக்கிடாததால் சேதாரங்கள் ஏற்படுகின்றனவா? அங்கே ஒரு இடத்திலிருந்து ஏற்றி இன்னொரு இடத்தில் வந்து சேர்ந்த பிறகு, இந்த இடைத்தூரத்தில் இவ்வளவு சேதாரம் எப்படி ஏற்பட முடியும்? அதற்கு யார் பொறுப்பு? தஞ்சாவூரிலேயே பல ஆண்டுகளாகக் குறைத்து ஏற்றுவது, பின்னாலே அதற்குக் கண்காணிப்பு சரியாக இல்லாதது .... இதற்கெல்லாம் யார் பொறுப்பு என்று கண்டுபிடித்தார்களா? இதிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய நடவடிக்கைகள் கண்காணிப்புக்குரியது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்த நெல் ஈரம் காய்வதிலே நிச்சயமாகக் குறைவு ஏற்படக்கூடியது தான். வீட்டில் கூட அறுவடை செய்த நெல்லை 3, 4 நாட்கள் வைத்திருந்தால், அதனுடைய எடை அதிகமாகக் குறையும். அதுவே அரிசியாக இருந்தாலும் கூட எடை குறையும். சாப்பாட்

டுக்காக இருக்கின்ற அரிசி பழைய அரிசியாக இருந்தால், வடிக்கும் சோறு அதிகமாக ஆகும், ஆனால் புதிய அரிசியாக இருந்தால் சோறு அதிகமாக உண்டாக முடியாது என்றுகூடச் சொல்கிறேன். அதெல்லாம் அததனுடைய பதத்தைப் பொருத்திருக்கின்றது. அந்தக் காரணங்களாலே ஏற்படுகிறதே தவிர வேறு அல்ல. கூடியவரையில் அங்கேயும் போடுகிறார்கள், இங்கேயும் போடு கிறார்கள், இப்போது இந்தத் திட்டம் கண்டிப்பாக நடைபெற்று வருகிறது. இப்போது அதிகமாக ரோடு போக்குவரத்திலே கொண்டுவர ஏற்பாடு செய்கி றோம். ரோடிலே கொண்டு வருவதனால், சில இடங்களில் ரயில் போக்குவரத் திலே கொண்டு வருவதைவிட கொஞ்சம் தொகை, ரூபாய் 3 வரை அதிகமாகச் செலவாகிறது. சில இடங்களில் ரூபாய் 5 அல்லது ரூபாய் 6 வரைகூட செல வாகிறது. இந்தச் சேதாரத்தை ஓரளவுக்குக் குறைப்பதற்கு, பொருளாதார முறைப்படி கணக்கிட்டு, அதைச் சரி செய்துகொண்டு வருகிறோம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, சேதாரத்திற்காக .5 பர்சென்ட் அனுமதிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை அனுபவத்தில் பார்த்தால், இப்போது .39 சதம் அளவில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த சதவிகிதத்தை இன்னும் குறைத்து நிர்ணயித் தால், இன்னும் கண்காணிப்புடன் அவர்கள் வேலை செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த முறையை ஆராய்ந்துபார்ப்பார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்த அளவு சேதாரம் வருகிறது என்றால், குறுவையிலேதான் இது ஏற்பட்டு வருகிறது. மழைக் காலத்தில்தான் குறுவை அறுவடை ஆகிறது. நல்ல மழைக் காலத்தில் அறுவடை பண்ணுவதனால், அதை சர்க்காரே கொள்முதல் செய்து வாங்கு கிறது. இந்த அளவுக்கு காப்பாற்றப்பட்டிருப்பது மேல் என்பது திரு. ரெட்டி யார் போன்று அனுபவம் உடையவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருது கிறேன். இப்போது வரவரக் குறைப்பதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம். அதைச் சமாளித்து வருகிறோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: (விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்யும்போது (குறுக்கீடு) மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்யும்போதே இத்தனை பர்சென்ட் கழித் துக்கொண்டுதான் கொள்முதல் செய்வது என்பதை கிராமங்களில் பார்க்கிறோம். அதற்கு ஒரு கணக்கு இல்லையா? 'மாயிஸ்சர்'க்காக எவ்வளவு கழித்துக் கொள்ள வேண்டுமோ அதை விடக் கழித்துத்தான் வாங்குகிறார்கள். அந்தந்த

1974 சனவரி 21]

மாவட்டங்களிலே கொள்முதல் பண்ணும்போது கழித்துவாங்குவதைவிட மேலாகக் குறைவு ஏற்படுகிறதா அல்லது அதிலேயே சரிக்கட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, 57 கிலோ வுக்கு 14 பர்செண்ட் வரை நாங்கள் 'மாய்ஸ்சர்'க்காகக் கழித்து வாங்குகிறோம். அதுதான் இப்போது இருக்கின்ற கணக்கு. உற்பத்தியாளர்களுக்கு நஷ்டம் வாராத அளவுக்கு அரசு வாங்குகிறது. அந்த நெல் வாங்கிய பிறகு, காயாமல் இருக்க முடியாது. சர்க்காராக இருந்தாலும், அப்படிக் காய்ச்சல் ஏற்பட்டு வருகின்ற நஷ்டத்தை தனியாக வியாபாரத் துறையிலே கணக்கிட்டு, அதை அரசு ஏற்றுக்கொள்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, சேதாரம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே கூறினர்கள். ஆனல் இதிலே ஏற்படுகின்ற சேதாரம், ரயில் போக்குவரத்திலே இல்லாமல் பெருச்சாளிகளால்தான் ஏற்படு கிறது என்று சொல்கின்றார்களே, அது உண்மைதானு? பெருச்சாளிகளால் ஏற்பட்ட சேதாரம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பெருச்சாளிகளினுல் நாட்டிலே பல சேதாரங்கள் ஏற்படுகின்றன. ஆனல் நான் சொன்ன சேதாரம் பெருச்சாளிகளால் ஏற்பட்ட சேதாரம் அல்ல, அல்ல என்று சொல்லிக்கொள் கிறேன்.

Pension to Arul Thiru Sivagnana Thambiran

@ * 1 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any petition regarding the pension due to Arul Thiru Sivagnana Thambiran of Srila Sri Gnanaprakasa Desika Swamigal Madam, Kanchipuram; and

(*b*) if so, the action taken by the Government thereon?

@ 19—1—1974 ஆம் நாள் வினுப் பட்டியிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.